மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மாநில கணக்காய்வு (அக்கவுண்டண்ட்-ஜெனரல்) அலுவலகத்தில் போடப்பட்ட தடையுத்தரவால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஏ. ஆர். மாரிமுத்து, டாக்டர் ஹாண்டே ஆகியோர் ஏ.ஜி. அலுவலகத்தில் போடப்பட்ட தடை உத்தரவு பற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். எப்படி அது ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இது அண்மையில் நடந்த நிகழ்ச்சி; அதிலும் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. நமது மாநில அரசாங்கத்திற்கு இதிலே எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்பதைப் பற்றி நாம் சற்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அக்கவுண்டன்ட்-ஜெனரல் ஆபீஸ் தனி நிறுவனமாக அரசியல் அமைப்புச் சட்டப்படி இருந்தாலும் அங்கு நடக்கின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நமது அரசாங்கத்தின் அலுவல்களைப் பாதிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. உதாரணமாக, பென்ஷன், பிராவிடன்ட் ஃபண்ட் போன்றவை எல்லாம் அவர்கள் மூலமாகத்தான் நம்முடைய ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த அலுவலகத்தை இரண்டாகப் பிரிவினை செய்ததன் காரணமாக இப்போது கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கிளர்ச்சியின் விவரங்களைப்பற்றி நான் இங்கு விரிவாகக் கூறவில்லை. அவர்கள் சமாதானமான முறையில் ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருக்கின்ற இன்னொரு பதட்டமான நிலைமை என்னவென்றால் உயர்ந்த

அதிகாரிகள், வாச் அண்டு வார்டு என்ற போர்வையில் பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் மற்றவர்களும் அந்த அலுவலகத்திற்குள் செல்ல தடை ஏற்படுத்தும் நிலைமையை வகுத்து வைத்திருக்கிறார்கள். சனிக்கிழமையன்று இந்த அலுவலகத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்கச் சென்றேன். கேட்டிலிருந்த வாச் அண்டு வார்டு உள்ளே யாரும் செல்லக்கூடாது என்று தடுத்துவிட்டனர். 'நான் சட்டமன்ற உறுப்பினர், என்ன நடக்கிறது என்று அறிய வந்திருக்கிறேன்' என்று சொன்னதும் உள்ளே சென்று போலீஸ் அதிகாரியிடம் அனுமதி வாங்கி பிறகு என்னை உள்ளேவிட்டார்கள். லா அண்டு ஆர்டர் நமது தனிப் பொறுப்பாக இருக்கின்ற நிலையில் நம்முடைய போலீஸ் அதிகாரிகள் சரியான முறையில் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அக்கவுண்டண்ட்-ஜெனரல் ஆபீசில் சமாதானமான முறையில் நடக்கின்ற இந்தப் போராட்டத்தை முறியடிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கலாம். இதிலே நம்முடைய அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். இது ஒரு முக்கியமான பிரச்சினையாக, நம்முடைய அலுவல்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக இருக்கும் காரணத்தால் இதுபற்றி மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்ல நாமும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். ஒரு தனி ராஜ்யமாக அவர்கள் இயங்கிக் கொண்டிருப்பது சங்கடமான நிலைமைக்குக் கொண்டு போய்விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையின் மீது அங்கு பலரையும் வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். இதெல்லாம் நம்முடைய அரசாங்கத்தின் பொறுப்பில் வராது என்றாலும் இதிலே சுமுகமான முடிவு ஏற்படுவதற்கான வழிவகைகளைத் தேடித் தருவது பற்றி விவாதிக்க இந்தச் சபையின் காலத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, I would like to read the adjournment motion given notice of by me.

1973 நவம்பர் 26] [திரு. கே. டி. கே. தங்கமணி]

"Promulgation of prohibitory police order even inside A.G. Office, Madras, since 23rd November 1973 which emboldens unfair labour practice of the A.G., who had taken action against 20 employees for normal Trade Union activities and tension in Teynampet area and unrest among workers in Madras City generally and A.G. Office in particular."

இந்த ஒத்தி வைப்புத் பிரேரணை கொடுத்ததன் நோக்கம் என்னவென்று கூற விரும்புகிறேன். ஏ.ஜி. ஆபீசில் பணியாற்றக் கூடிய 1,200 சிப்பந்திகள் தங்களுடைய நியாயமான கோரிக்கை களுக்காக போராடி வருகிறார்கள். இந்தத் தொழிற்சங்கம் மத்தியிலே இருக்கக்கூடிய தொழிற்சங்கத்தின் பகுதி. இது அங்கிகரிக்கப்பட்ட தொழிற்சங்கம். அங்கு வேறு எந்தவிதமான போட்டிச் சங்கமும் கிடையாது. அங்கு பணியாற்றக்கூடிய வர்கள்—தங்களுக்கே தெரியும்—எல்லோரும் பட்டதாரிகள். அப்பேற்பட்டவர்கள் குறிப்பிட்ட பிரச்சினை வரும்போது பைஃபர்கேஷன் கொள்கை பற்றி இதுவரை எந்த முறையில் பேச்சு வார்த்தை நடந்ததோ அதே மாதிரி நடக்க வேண்டு மென்று விரும்பினார்கள். அதற்கு மாறாக இப்போது வந்திருக்கிற புதிய ஏ.ஜி. அவர்கள் நேரடியாகப் பேசமாட்டேன்—'Terms and conditions of service: I will only make a statement about the terms and conditions only in the newspapers' என்ற ஒரு நிலையை எடுத்திருப்பது தொழிற்சங்கத்திற்கு உள்ள விஷயம் அல்ல. இந்த ஏ.ஜி. வந்து இரண்டு மாத காலந்தான் ஆகிறது. இவர் வந்த பிறகுதான் விவகாரங்கள் முற்றிக்கொண்டு போவதாக அறிகிறேன். பொதுவாக, சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய முக்கியமான தலைவர்கள் எல்லாம் அந்த இடத்திற்குச் சென்று அவர்களுடைய கோரிக்கை என்ன என்று அறிந்து வந்தோம். 21-ம் தேதி இரவு 7 மணி சுமாருக்கு மற்றத் தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள் இவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென்று மவுண்ட் ரோட்டில் லைட்டுகள் அணைந்தன. அது நம்முடைய கார்ப்பரேஷனுக்குச் சொந்தம். கார்ப்பரேஷனுக்கும் இதற்கும் என்ன இணைப்பு என்று தெரிய வில்லை, அது அணைந்தவுடன் உடனடியாக என்ன கருத்து

ஏற்பட்டது என்றால் மாநில அரசு இந்தப் போராட்டத்தை முறியடிக்க ஏ.ஜி.க்கு உதவியாக நடவடிக்கை எடுக்கிறதோ என்ற ஐயப்பாடு ஏற்பட்டது.

இப்போது தடையுத்தரவு போட்டிருக்கிறார்கள். ரோடுகளில் போகக்கூடாது, கூடக்கூடாது என்று தடை உத்தரவு போடு வார்கள். இந்த ஆபீசுக்குள்ளேயே கூடக்கூடாது என்ற தடை உத்தரவு எப்படித்தான் பொருத்தமோ, தெரியவில்லை. வெளியில் நோட்டீஸ் போர்டில் இந்த மாதிரி எழுதி வைத்திருக்கிறார்கள்—

1. Suspended and terminated employees are not allowed to enter the Office.

2. No meeting is allowed inside the Office Compound.

3. No outsiders are allowed.

இது ரொம்ப விபரீதமாக இருக்கிறது. எந்தக் காலத்திலும் இந்த மாதிரி உத்தரவு போட்டதே கிடையாது. ஆபீசுக் குள்ளேயே காம்பவுண்டுக்குள்ளேயே கூடிப் பேசக்கூடாது; வெளியார் யாருமே போகக்கூடாது—நாங்களும் வெளியார்தான்; எப்பேர்ப்பட்டவர்களாக இருந்தாலும் வெளியார் போகக் கூடாது என்ற முறையில் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.—'பை ஆர்டர்'— என்று போட்டிருக்கிறார்கள்.

By Order—Whether it is by order of the Commissioner of Police or by Order of the Accountant-General.

என்று நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இப்போது நிரந்தர மாகப் போலீஸ் போட்டு நின்று கொண்டிருக்கிறது. போலீசார் அலுவலகத்திற்குள்ளேயே போயிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்றத்தில் போலீஸ் உடையோடு வரக்கூடாது என்று சொல்லுகிறோம். ஆனால் இந்த ஏ.ஜி. அலுவலகத்திலே போலீசார் நிறுத்தப்பட்டு உள்ளே இருக்கின்ற நிலையும் ஏற்படுகிறது. இதனால் அந்த சிப்பந்திகள் நினைப்பது என்ன வென்றால், நம்முடைய தமிழக அரசு இந்த ஏ.ஜி.யை நிர்ப்பந்தப் படுத்தி பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று சொல்வதற்குப் பதிலாக இந்த சிப்பந்திகளை நிர்ப்பந்தப்படுத்துகிறார்களோ என்ற

1973 நவம்பர் 26] *[திரு. கே. டி. கே. தங்கமணி]*

ஐயப்பாடு அவர்களிடத்திலே தோன்றியிருக்கிறது. ஆகவே, சென்னையிலுள்ள எல்லாத் தொழிற்சங்கங்களும் இந்த உத்தரவைப் போட்டது தவறு என்று சொல்கிறார்கள். சாதாரண தொழிற்சங்கங்களிலே,

Police are not to interfere with the normal trade union activities.

இதிலே ஆர்பாட்டமோ கலாட்டாவோ செய்கின்ற பகுதி அல்ல அது. அவர்களைப் பொறுத்தவரையில், யார் சொல்வதையும் கேட்டு நடப்பவர்கள் அல்ல அவர்கள். நிரந்தரமாக அங்கே என்ன ஏற்பட்டிருக்கிறது? இந்த நிலைமைகளில் போலீசைப் பயன்படுத்துவதால், 14 பேரை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தினுடைய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் சஸ் பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் டெம்பரரி சிப்பந்திகள் 2 பெண்கள் உள்பட பலர் சஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார்கள். எனவே, போலீஸ் உத்தரவை வாபஸ் வாங்க வேண்டும்.

I would request the state Government to use their good offices to put some sense into the A.G.

ஏதோ நான் அறிந்தவரையில் அந்த ஏ.ஜி.யாக வந்திருப்பவர் பல இலாக்காக்களுக்குப் போய் ரிவர்ட் ஆகித் தள்ளப்பட்டவர் என்று அறிகிறேன்.

I can well understand his psychology.

இங்கு வந்து சிப்பந்திகளைப் பழிவாங்கும் முறையிலே தவறாக பேசுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு அதிகாரி சென்னை நகரத்திலே நம்முடைய தொழிற்சங்கங்கள் செயல்படுவதைப் பாதிக்கும் அளவில் நடவடிக்கை எடுத்தால் அது முக்கியப் பிரச்னையாக வருகிறது. ஆகவே அரசு தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இதில் தலையிட்டு மேலும் இதை டெவலெப் பண்ண விடாமல் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு பேசி, பழிவாங்கும் நடவடிக்கைகளை வாபஸ் வாங்க வேண்டுமென்பதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும். பலாத்காரமான முறையிலே உள்ளேகூட கூடக்கூடாது என்று போட்டிருப்பது தவறான போக்கு என்பதைச் சுட்டிக்காட்டி

இதைப்பற்றி விவாதிப்பதால் இம்மாதிரி உத்தரவு போடுவது எவ்வளவு தவறானது என்ற கருத்தோட்டத்தை விளக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, ஏ.ஜி. அலுவலகத்திலே கடந்த சிலதினங்களாக நடைபெறும் நிகழ்ச்சியைப்பற்றி முன்னால் பேசிய தலைவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஏ.ஜீ. ஆபீசிலே ஏ.ஜீ.க்கும் அந்த ஊழியர்களுக்கும் உள்ள ஒரு தகராறை சுமுகமாகத் தீர்த்து வைக்க வேண்டியது நம்முடைய பொறுப்பும், கடமையும் ஆகும். நம்முடைய தமிழகத்தினுடைய வேலைகள் பல அங்கே நடைபெற்றாக வேண்டியுள்ளது. பென்ஷன் பிராவிடென்ட் ஃபண்ட் போன்றவைகள் காலத்தோடு கிடைப்பதற்கு உதவிகரமாக இருப்பதற்குப் பதிலாக நாள் கடத்துவதால் தமிழகத்திலே உள்ள பலருக்கும் பலவிதமான சிரமங்கள் ஏற்படும்.

அங்கே விசாரித்ததிலே அந்த ஊழியர்களுடைய கோரிக்கைக்கும், ஏ.ஜீ.யினுடைய போக்குக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. சுமுகமாகத் தீர்க்கப்படக்கூடிய ஒன்றுதான். அந்தக் கோரிக்கைகளைப் பெரிய கோரிக்கைகளாகக் கருதுவதற்கில்லை. ஏதோ அவர்களுக்கிடையிலே ஆரம்பத்திலே ஏற்பட்ட நிகழ்ச்சியால் சுய கௌரவம் எடுத்து இதைச் செயல்படுத்துவதாகத்தான் நான் கருதுகிறேன். இதை நமது அரசு தரப்பிலே தலையிட்டு அதைத் தீர்த்து வைக்க வேண்டியது நம்முடைய பொறுப்பு என்று நான் கருதுகிறேன். அப்படி அதிலே நாம் தலையிட இயலாது என்றால் கூட மத்திய அரசுக்கு இதை உடனடியாகத் தெரிவித்து இதை சுமுகமாக, உடனடியாகத் தீர்ப்பதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டாக வேண்டும்.

இதை அதிகமாக வளர விடுவது, போலீஸ் நடை உத்தரவு போட்டு, அதற்காக போலீசை அங்கே வைத்துக்கொண்டிருப்பது, நாள் கடத்துவது ஆகியவை பல பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் உடனே நாமே தலையிட்டுச் செய்ய முடியுமென்றால் இங்கே அதைச் செய்யலாம். இல்லை என்றால் மத்திய அரசுக்குச் சொல்லியாவது அதை உடனடியாகத் தீர்ப்பதற்கான முயற்சியை

1973 நவம்பர் 26] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

மேற்கொள்ள வேண்டுமென்று கோரி, இதை அரசுக்குத் தெரியப் படுத்த வேண்டிய அவசியமான நிலைமைகளை எடுத்துச் சொல்ல சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, I have given notice of the following adjournment motion standing in my name :—

"That this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the serious situation arising as a result of promulgating section 41 of the Madras City Police Act in and around Madras A.G.'s Office, Mount Road.'

Sir, I would briefly refer to certain points for the consideration of the House so that the adjournment of the House can be decided later by the Hon. Speaker.

At the outset I would like to state that the matter is not of to-day's origin or yesterday's origin. There has been a serious discontentment in the A.G.'s Office for quite a long time but it has taken a gigantic proportion only now because of the present Accountant-General.

Sir, last year in the month of June itstlf, the members belonging to the A.G.'s Office Union were assured that the order regarding the bifurcation of the A.G.'s Office would be given to them so that they could discuss it with the A.G. all the aspects, all the pros and cons of it. Then the employees went and met A.G. and said that they would like to have a copy of that order bifurcating the A.G.'s Office. Then the A.G. refused to give the order to the members of the Union. Then a sort of cold war was going on for quite some time but after six or seven months, after a great deal of pressure, copies of that order were handed over to the Union leaders. Then the Union leaders protested against the bifurcation. My submission is that the whole thing could have been very peacefully settled across the negotiating table. Instead of that, the A.G. chose to utilise the State Government for his mischievous action inside the campus of the A.G.'s Office and that is why I have brought forward the adjournment motion. He chose to utilise the huge police force for his activities and to this we are taking serious

objection. What happened was that he gave a complaint to the State Government saying that the loyal workers were attacked by the striking workers. It is not a case of loyal and non-loyal workers and all the workers are loyal and the A.G. tried to divide the workers by saying that the loyal workers are willing to work but they are prevented by the other workers, and therefore a law and order crisis has developed and therefore he required the assistance of the Police. Now he is trying to utilise the policemen to browbeat the workers by asking for a large number of policemen and allowing the policemen inside the compound of the A. G.'s Office and also inside the hall. In fact, hon. Members, Thiru K. T. K. Thangamani, Thiru Marimuthu, Thiru Munu Adhi and myself went and saw what was happening there. This is one aspect of the matter.

Then I come to another point. There are a number of ladies who bring the children to the office. It is a human problem and the children are put up in the creche. When the ladies wanted to give milk to their children they were prevented from doing so. In fact, they met us and they wept. They stated that they were not allowed to meet children and give milk even at 5 o'clock. The creche is attached to the A.G.'s Office for the benefit of the staff who have young children. But they are not allowed to go there and they are confined to their rooms which are locked and this is a peculiar thing. The Government may not know all these things and that is why I bring this matter to the attention of the Government. Now the A.G. tries to utilise the Government to arrest some members of the staff. When they have got power to arrest them they have also got power to arrest even the A.G. Therefore, let not the A.G. give such a threat. In fact, a number of workers told me that they were told: 'you are all rice-eaters' and all sorts of things. These things should be completely stopped.

These are matters fit to be discussed in an adjournment motion. The employees should not be treated like this. They are all graduates and post-graduates. There is one other thing. The suspended employees are not allowed to enter the building. Section 41 is there and they are not allowed to enter the campus. If one is suspended, he is not allowed to enter his seat. Surely if

he is a union leader, he can go to his union office. But, here do you know what the Accountant-General has done? He has prevented the suspended employees from entering the campus, using the police force of the State Government.

Finally, I understand that the Hon. Thiru Rajaram, our Labour Minister wanted to contact the Accountant-General to bring about a settlement I do not know whether it is a fact. But I understand an attempt had been made by the Minister. How far he has been successful, we do not know. It is a duty and it is the onus, responsibility of this State Government also. The State Government should immediately do the following things, viz., (i) remove the police force and suspend operation of Section 41, (ii) to see that no violence is perpetrated on the employees of the Accountant-General's Office, and (iii) the State Government should immediately intervene with the Central Government and see that an understanding between the Accountant-General and the employees is brought about. Otherwise the Accountant-General will have to answer for the things that may happen. The entire onus will be on the Accountant General. We on our part also should not be later on blamed. The State Government should not be blamed that we abetted in the activities of the Accountant-General. With these words I resume my seat.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இங்கு கொண்டு வந்திருக்கக்கூடிய ஒத்திவைப்புத் தீர்மானத்தில் உள்ள பிரச்னை ஒத்திவைப்புத்தீர்மானத்திற்குள் வராது என்பது நமக்கு நன்கு தெரியும். அன்றாட நிர்வாகம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி களாக இருந்தாலும் ஒரு பெரிய பிரச்னை அங்கு உருவாகியிருப் பதால் அது இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

இது மத்திய அரசின் பிரச்னை என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆகவேதான் இங்கு அதிகமாக மாநில அரசைப் பற்றிச் சொல்லவில்லை. இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைப்ப தில் மாநில அரசு எந்தளவிற்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவிற்கு உதவி செய்யலாம். இங்கு தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் இந்தப் பிரச்னையில் சுமுகமான தீர்வு காணும்படி மத்திய அரசுக்கு இந்த அரசு யோசனை கூறும் என்ற உறுதியை இந்த சந்தர்ப்பத்திலே தர ஆசைப்படுகிறேன்.

[திரு. செ. மாதவன்] [1973 நவம்பர் 26

இங்கு நம் போலீஸ் நிர்வாகம் பற்றி முக்கியமாக எழுப்பப் பட்டிருக்கிறது. இது ஒரு டெலிகேட்டான பிரச்னை. சட்டம் ஒழுங்கை நாம் நிலைநாட்டும்போது மத்திய அரசு நம் உதவியை நாடுமானால் நாம் உதவி செய்துதான் ஆகவேண்டும். அதற்கு வேறு வழி இல்லை. இந்தப் பிரச்னையைப் பொறுத்தளவிற்கு ஏ.ஜி. அவர்கள் நம்மிடத்தில் சொல்லியிருப்பது பைபர்கேஷன், இரண்டாகப் பிரித்து புது நடைமுறையைக் கொண்டுவந்தது அகில இந்திய அளவில் ஆல் இந்தியா அசோசியேஷனோடு பேச்சு வார்த்தை நடத்திய பிறகுதான் கொண்டுவந்திருக்கிறோம், இதில் யாருக்கும் எந்தவிதமான அநீதியும் இழைக்கப்படாது என்ற உறுதியை தந்திருக்கிறார்கள். ஆனால் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கிறது என்பது அலுவலர்களுடைய வாத மாகும்.

அடுத்து, அவர்கள் சொல்லியிருப்பது சில பேர்களை தாற் காலிகமாக வேலைநிறுத்தம் செய்து வைத்திருக்கிறோம், ஏ.ஜி. அலுவலகத்தின் காம்பவுண்ட் எல்லைக்குள்ளாக வெளியாரையும் அழைத்து வந்து கூட்டம் போடுகிறார்கள், பலாத்காரத்தைத் தூண்டும் வண்ணம் பேச்சுக்கள் பேசப்படுகின்றன, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தடுக்கவேண்டும் என்று அவர்கள் எழுதியே கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அப்படிக் கேட்டிருப்பதன் காரணமாக நம் காவல்துறை அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுத்துத்தான் ஆகவேண்டும், அதில் வேறு வழியில்லை என்று நான் கருதுகிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில், மத்திய அரசு, ஏ.ஜி. அவர்கள் சார்பில் கேட்டுத்தான் நாம் அதை நிறைவேற்றியிருக் கிறோமே தவிர நாமே தன்னிச்சையாக அங்கு அலுவல் செய்கிற அலுவலர்களுக்கு எதிராக எந்த முயற்சியும் எடுக்கவேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கே. டி. கே. தங்கமணி அவர்கள் லேட்டை ஆப் ஆக்கியிருப் பதாக சொல்லியிருக்கிறார்கள். அது இயற்கையாக ஆகியிருக்கும் என்று கருதுகிறேன். பலயிடங்களில் அடிக்கடி விளக்குகள்

அணைந்து போவதாகச் சொல்கிறோம். உறுப்பினர்கள் பேசுவதற்காக நிச்சயமாக ஆப் பண்ணியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். பெண்கள் பிள்ளைகளுக்கு பால் கொடுப்பதைத் தடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இவையெல்லாம் சிறிது மிகைப்படுத்தியிருக்கும் என்று கருதுகிறேன். நிச்சயமாக அந்தக் கொடுமையைச் செய்யமாட்டார்கள். அப்படிச் சொல்கிறார்கள் என்ற கருத்தை ஏ.ஜி. அலுவலகத்திற்கு தெரிவிப்போம். அப்படிப் பட்ட கொடுமை நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு யோசனை சொல்வதாகச் சொல்லிவிட்டு அதைச் சொல்லாமல் உட்கார்ந்து விட்டார்கள். ஒருவேளை இங்கு பேசியதையெல்லாம் மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்ற யோசனையாக இருக்கலாம் என்று நம்புகிறேன். அதைச் செய்வதாக ஏற்கனவே உறுதி கூறியிருக்கிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள் இதில் அதிகக் கவனம் செலுத்தியிருக்கலாம், அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. சொல்லமுடியாத நிலை என்று நினைக்கிறேன். இருந்தபோதிலும் மாநில அரசைப் பொறுத்த அளவிற்கு உறுப்பினர்களின் எண்ணங்களை மத்திய அரசுக்குத் தெரிவித்து இதில் சுமுகமான முடிவைப் பெற முயற்சிக்கும் என்ற உறுதியைக் கூறி இதற்கு மேலும் அவையை ஒத்திவைத்து விவாதிக்க தேவை இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைக்கவேண்டிய தேவையில்லை என்பதால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) மதுரை அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்புச் சாகுபடியாளர் நிலைமைகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அலங்கநல்லூர் சர்க்கரை ஆலைபற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.